# பொதுப்பணித்துறை
# கட்டடம்

## கோரிக்கை எண். 39
## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2011 – 2012

**கே.வி.இராமலிங்கம்**
பொதுப்பணித் துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு
2011

## பொருளடக்கம்

| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1. | பொது | 1 |
| 2. | நிதி ஒதுக்கீடு 2011 – 2012 | 10 |
| 3. | துறைவாரியான பணிகள் (2011 – 2012) | 14 |

## முன்னுரை

பொதுப்பணித்துறை அரசின் முதுமையான சேவைத் துறைகளில் ஒன்றானதாகும். இத்துறை கடந்த 153 ஆண்டுகளாக அரசு கட்டடங்கள், கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டுவருகிறது.

நமது நினைவுச் சின்னங்களும், சேவைக் கட்டடங்களும் இத்துறையின் தொழில்நுட்ப திறமைக்கு சான்றாக விளங்குகின்றன. தற்போதைய சூழ்நிலைக்கேற்ப மின் ஆளுகையின் மூலம் இவ்வமைப்பு சிறந்த சேவையை பொது மக்களுக்கு அளிக்கும் நோக்கோடு செயல்படுகிறது. இந்த தொலைநோக்கு பார்வையுடன் சிறந்த சேவை அளிப்பதற்கு இத்துறை எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

இந்திய தர நிறுவன விதிகளில் நிர்ணயித்துள்ள விவரக் குறிப்பின் அடிப்படையில் தற்கால தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டட அமைப்பு பொதுக் கட்டடங்களின் கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்து வருகிறது.

பொதுப்பணித்துறை, அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள புராதானக் கட்டிடங்களை (Heritage Buildings) அதன் தொன்மையான கட்டடக்கலை, கலைநயம், வரலாற்று சிறப்புகள், தனித்துவமான அடையாளங்கள் மற்றும் தொல்லியல் மரபுகள் மாறாவண்ணம் சீரமைத்து, பாதுகாத்து, பராமரித்து வருகிறது.

மக்களுக்கு பாதுகாப்பான, பொருத்தமான பொதுக் கட்டடங்களை நியாயமான செலவில், நன்கு உருவான நடைமுறைகள் மற்றும் தற்கால தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கட்டித்தரும் தரமான நற்பணியை தொலைநோக்கு பார்வையுடன் இத்துறை செயலாற்றி வருகிறது.

# பொதுப்பணித் துறை

## கட்டடம்

## 1.0. பொது

பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பு, பள்ளிக் கல்வி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம், உள்துறை (நீதிமன்றங்கள், போக்குவரத்து, சிறைச்சாலைகள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் உள்ளிட்ட), வருவாய், வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், சுற்றுலா மற்றும் பண்பாடு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, சமூக நலம் போன்ற பல்வேறு அரசுத்துறைகளின் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

நவீன தொழில்நுட்பம் மற்றும் கடந்த பல ஆண்டுகளில் பெறப்பட்ட அனுபவங்களைக் கொண்டு பாதுகாப்பான அரசுக் கட்டடங்களை நியாயமான செலவில் கட்டுவதற்கு தரமான சேவையை பொதுப்பணித் துறை அளித்து வருகிறது. பொதுப்பணித் துறையின் கட்டட வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப வரையறைகள் யாவும் இந்தியத் தர நிர்ணய விதிகளை பின்பற்றியே அமைகின்றன.

## 1.1. முக்கிய செயல்பாடுகள்

பொதுப்பணித் துறை, பின்வரும் முக்கிய செயல்பாடுகள் மற்றும் தொடர்புடைய செயல்களை நிறைவேற்றி வருகிறது.

- மாநில அரசின் முதலீட்டு உடைமைகளாக விளங்கும் அரசுக் கட்டடங்களை திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

- அரசின் சார்பில் நினைவுச் சின்னங்கள் மற்றும் நினைவிடங்களை கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

- நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டப் பணிகளை வைப்புத் தொகை பணிகளாக மேற்கொள்ளுதல்.

- ஆழிப் பேரலை மறு சீரமைப்புப் பணிகள் போன்ற பேரிடர் மறுகட்டுமானப் பணிகளை செயல்படுத்துதல்.



- பாரம்பரிய கட்டடங்களை புதுப்பித்து புனரமைத்தல்.

- மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் மாநில பல்கலைக்கழகங்கள் போன்றவற்றின் கட்டடப் பணிகளை வைப்புத் தொகை பணிகளாக மேற்கொள்ளுதல்.

- கட்டுமான பொருட்கள் மற்றும் கட்டடப்பணி நடைமுறைகள் குறித்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை மற்றும் நீதித்துறை போன்ற துறைகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் சொத்து மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- பொதுக் கட்டடங்களுக்கு உறுதிச் சான்றிதழ்கள், அரசு அலுவலகங்களுக்காக வாடகைக்கு எடுக்கப்படும் தனியார் கட்டடங்களுக்கு வாடகை நிர்ணயச் சான்றிதழ்கள் வழங்குதல்.

## 1.2. புதிய கட்டுமானப் பொருட்கள்

தற்கால தொழில்நுட்பத் தகவல்களை சேகரித்து அளித்தல் மற்றும் புதிய கட்டுமானப் பொருட்களுக்கான ஒப்புதலினை வழங்குவதற்கு கல்வி, ஆராய்ச்சி மற்றும் செயலாக்கும் துறைகளை சார்ந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய மதிப்பீட்டுக் குழு அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அக்குழுவால் ஒப்புதல் வழங்கப்படும் புதிய கட்டுமானப் பொருட்களை பொதுக் கட்டடங்களின் கட்டுமானம் மற்றும்



பராமரிப்பு பணிகளில் பயன்படுத்த சீரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 1.3. தரப் பரிசோதனை

சென்னையிலுள்ள தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம், கற்காரையின் தரத்தை, அமுக்க சோதனைக் கருவி மற்றும் சேதமில்லா சோதனை கருவிகள் மூலம், இந்திய தரநிர்ணய செயலகத்தின் தரநிர்ணய விதிகளின் அடிப்படையில் தரப் பரிசோதனை செய்து வருகிறது.

## 1.4. கலந்தாய்வு

பொதுப்பணித்துறையின் கட்டட மையம் அரசு சார்ந்த மற்றும் தனியார் கட்டடங்களுக்கு அனைத்து வகையான கட்டட கலந்தாய்வு

பணிகள், அதாவது திட்டமிடுதல், மதிப்பீடு தயாரித்தல் மற்றும் கட்டட அமைப்புக்கான வடிவமைப்பு செய்தல், ஆகிய பணிகளை உரிய வரையறுக்கப்பட்ட கட்டணம் பெற்று அளித்து வருகிறது.

## 1.5. மருத்துவ கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான புதிய பிரிவு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் படி மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கென தனியே ஒரு பிரிவு ஏற்ப்படுத்தப் படவுள்ளது. இந்த பிரிவு, மூன்று வட்டங்களை கொண்டு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மட்டுமே மேற்கொள்ளும்.



## 1.6. செந்தர விலைப் பட்டியல் 2011–2012

அரசுத் துறைகளால் கட்டுமானப் பணிகளுக்கென மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு மதிப்பீட்டுத் தொகையை நிர்ணயம் செய்வதற்கு அரசால் அமைக்கப்பட்ட குழுவின் ஒப்புதலோடு ஆண்டுதோறும், பயன்பாட்டிற்கு வரும் வகையில் செந்தர விலைப் பட்டியலை தமிழ்நாடு அரசு சார்பாக பொதுப்பணித்துறை இறுதி செய்து வெளியிட்டு வருகிறது.

இதுவரை எந்த ஒரு ஆண்டிலும் இல்லாத அளவில், **01.07.2011** முதல் பயன்பாட்டில் உள்ள இந்த **(2011–2012)** ஆண்டிற்கான செந்தர விலைப் பட்டியல், தொழிலாளர் ஊதியம், கட்டுமானப் பொருட்களின் விலை, பொருட்களை கொண்டு செல்வதற்கான போக்குவரத்து

செலவினம் முதலான இனங்களை கருத்தில் கொண்டு வெளிச்சந்தை நிலவரத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் ஊதியம் மற்றும் செங்கல் மற்றும் ஓடுகள் முதலான கட்டுமானப் பொருட்களின் விலையினை சுமார் 25 விழுக்காடுகள் வரையிலும், கருங்கல் ஜல்லி, இரும்பு கம்பி முதலான அத்தியாவசிய கட்டுமானப் பொருட்களின் விலையினை சுமார் 10 விழுக்காடுகள் வரையிலும் சென்ற ஆண்டு செந்தர விலைப் பட்டியலில் வழுங்கப்பட்ட விலையினை விட உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் எரிபொருட்களின் விலை கடந்த காலத்தில் உயர்ந்ததை கருத்திற்கொண்டு கட்டுமானப் பொருட்களுக்கான போக்குவரத்து செலவினமும் கணிசமாக உயர்த்தப் பட்டுள்ளது.



## 2.0. நிதி ஒதுக்கீடு 2011–2012

2011–2012–ஆம் நிதியாண்டில் கோரிக்கை எண்.39–ன் கீழ் ரூ.984.74 கோடி நிதி ஒதுக்கத்தில் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன:–

**(ரூபாய் கோடியில்)**

| | | |
|---|---|---|
| 1. | முதலீட்டுக் கணக்கு (திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகள்) | 534.54 |
| 2. | கணக்குகளிடையே மாற்றம் | 250.47 |
| 3. | வருவாய்க் கணக்கு (பராமரிப்பு மற்றும் பணியாளரமைப்பு) | 199.73 |
| | **மொத்தம்** | **984.74** |

இவைகளுடன், செலுத்துதல் கணக்குத் தலைப்பில், நபார்டு கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் பள்ளிக் கட்டடப் பணிகள், உலக வங்கி/ மைய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் மருத்துவமனை கட்டடப் பணிகள் போன்ற இதர துறை கட்டடப் பணிகளையும் பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.



## 2.1. திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகள்

### துறைவாரியான ஒதுக்கீடு – 2011–2012

**முதலீட்டுக் கணக்கு கோரிக்கை எண்.39**

| வ. எண். | துறைகளின் பெயர்கள் | வரவு செலவு 2011 – 2012 (ரூபாய் கோடியில்) | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம் | 254.52 | 47.61 |
| 2. | உள்துறை | 159.61 | 29.86 |
| 3. | வருவாய் | 20.79 | 3.89 |
| 4. | பிற துறைகள் | 99.62 | 18.64 |
| | **மொத்தம்** | **534.54** | **100.00** |

## 2.2. அரசுக் கட்டடங்கள் பராமரிப்பு

2011–2012–க்கான வரவுசெலவு திட்டத்தில் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை எண்.39–ன் கீழ் ரூ.39.33 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, ஆய்வு மற்றும் சுற்றுலா மாளிகைகள், பொதுப்பணித்துறை அலுவலகங்கள், அரசு அலுவலர் குடியிருப்புகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் அரசு மாளிகைகள் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கப்பட்டு உரிய பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிகளுக்காக 2011–2012ல் மற்ற துறைகளின் மானிய கோரிக்கைகளில் ரூ.222.31 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிகள், பள்ளிகள், சிறைகள், மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள், பதிவுத்



துறை அலுவலகங்கள், உள்துறை, வேளாண்மைத் துறை அலுவலகங்கள், ஆளுநர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர்களின் அரசு மாளிகைகள் மற்றும் பிற அரசுக் கட்டடங்கள் ஆகியவை முன்னுரிமை அடிப்படையில் பராமரிக்கப்படுகிறது.

# 3.0. துறைவாரியான பணிகள் (2011–2012)

## 3.1. பொதுப்பணித்துறை கட்டடங்கள்

### 3.1.1. சென்னை தாடண்டர் நகரில் குடியிருப்புகள் கட்டும் பணி

3.1.1.1. சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் 126 எண்ணிக்கை அரசு அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி செப்டம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3.1.1.2. சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் ரூ.77.29 கோடி மதிப்பீட்டில் 10 தளங்களுடன் கூடிய 7 அடுக்குமாடி கட்டடங்கள் கொண்ட 700 எண்ணிக்கை ‘‘சி’’ வகை அரசு அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்படவுள்ளன.

**3.1.2. பகுதி–II திட்டங்கள்: 2011–2012ஆம் ஆண்டிற்கான பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:–**

| வ. எண் | பணிகளின் பெயர் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பொதுப்பணித்துறை, கட்டட அமைப்பின் ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள தலைமையிட உபகோட்ட உதவி செயற் பொறியாளர்களுக்கு 32 எண்ணிக்கை புதிய ஈப்புகள் மாற்றீடு அடிப்படையில் கொள்முதல் செய்தல். | 162.00 |
| 2. | பொதுப்பணித்துறை, கட்டட அமைப்பின், திருச்சி மற்றும் மதுரை மண்டல தலைமைப் பொறியாளர்களுக்கு 2 எண்ணிக்கை புதிய சீருந்து கொள்முதல் செய்தல். | 10.50 |
| 3. | பொதுப்பணித்துறை, கட்டட அமைப்பின், திருச்சி மற்றும் மதுரை மண்டல துணைத் தலைமைப்பொறியாளர்களுக்கு 2 எண்ணிக்கை புதிய வாகனங்கள் கொள்முதல் செய்தல். | 10.13 |
| 4. | சென்னை தரமணியில் உள்ள தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி மையத்தின் சோதனைக் கூடத்திற்கு ஆய்வக கருவிகள் கொள்முதல் செய்தல். | 29.00 |
| 5. | சென்னை சேப்பாக்கம் வளாகத்தில் உள்ள கட்டட மைய மற்றும் பாதுகாத்தல் கோட்டத்தின் நூலக அரங்கை புதுப்பித்தல். | 26.00 |

| | | |
|---|---|---|
| 6. | கோயம்புத்தூர், கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட கண்காணிப்புப் பொறியாளருக்கு குடியிருப்பு கட்டும் பணி. | 33.00 |
| 7. | திருச்சியில் பொதுப்பணித்துறை வளாகத்தில், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்ட அலுவலக கட்டடம் கட்டும் பணி. | 7.70 |
| 8. | திருநெல்வேலியில் செயற்பொறியாளருக்கு குடியிருப்பு கட்டும் பணி. | 20.00 |
| 9. | கடலூர் மாவட்டம், சிதம்பரம் பொதுப்பணித்துறை வளாகத்தில், உதவி செயற்பொறியாளருக்கு குடியிருப்பு கட்டும் பணி. | 17.35 |
| | **மொத்தம்** | **315.68** |



**3.1.3. மாண்புமிகு அமைச்சர்களுக்கான குடியிருப்பு மாளிகைகள் கட்டும் பணி**

அடையாறு, பசுமை வழிச் சாலையில் அமைந்துள்ள குடியிருப்பு மாளிகைகள் மாண்புமிகு அமைச்சர்களுக்கு போதுமானதாக இல்லை. எனவே, கூடுதலாக 5 புதிய குடியிருப்பு மாளிகைகள் ஒவ்வொன்றும் 3,814 சதுரஅடி பரப்பளவில் காலியாக உள்ள இடங்களில் கட்டப்படவுள்ளன.

## 3.2. நீதித்துறை

**3.2.1. 2011–2012 மற்றும் 2012–2013ம் ஆண்டுகளில் முடிக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் குறித்த விவரங்கள்:**

| வ. எண் | பணி | தொகை (ரூ. கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 1. | சிவகங்கை (நீதிமன்ற அரங்கம்–6 மற்றும் குடியிருப்பு–1) | 7.98 | குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டது. நீதிமன்ற அரங்கப் பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடிக்கப்படவுள்ளன. |
| 2. | கடலூர் (நீதிமன்ற அரங்கம்–10 மற்றும் குடியிருப்பு–2) | 10.02 | குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டது. நீதிமன்ற அரங்கப் பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடிக்கப்படவுள்ளன. |
| 3. | அறந்தாங்கி (நீதிமன்ற அரங்கம்–3 மற்றும் குடியிருப்பு–1) | 3.53 | குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டது. நீதிமன்ற அரங்கப் பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடிக்கப்படவுள்ளன. |
| 4. | கும்பகோணம் (நீதிமன்ற அரங்கம்–10 மற்றும் குடியிருப்பு–10) | 9.97 | பணிகள் மார்ச் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளன. |
| 5. | தூத்துக்குடி (நீதிமன்ற அரங்கம்–7 மற்றும் குடியிருப்பு–3) | 8.88 | குடியிருப்புப் பணிகள் முடிக்கப்பட்டன. 4 நீதிமன்ற அரங்கப் பணிகள் முடிக்கப்பட்டன. 3 நீதிமன்ற அரங்கப் பணிகள் தொடங்கப் படவுள்ளன. |
| 6. | உத்தமபாளையம் (நீதிமன்ற அரங்கம்–3 மற்றும் குடியிருப்பு–3) | 5.17 | குடியிருப்புப் பணிகள் செப்டம்பர் 2011ற்குள் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளன. நீதிமன்ற அரங்க பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடிக்கப்படவுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| 7. | சங்ககிரி (நீதிமன்ற அரங்கம்–4 மற்றும் குடியிருப்பு–2) | 5.62 | குடியிருப்பு பணிகள் முடிக்கப்பட்டன. நீதிமன்ற அரங்கப் பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளன. |
| 8. | பவானி (நீதிமன்ற அரங்கம்–4 மற்றும் குடியிருப்பு–2) | 5.28 | பணிகள் நவம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 9. | ஆத்தூர் (நீதிமன்ற அரங்கம்–4 மற்றும் குடியிருப்பு–3) | 6.96 | பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 10. | கள்ளக்குறிச்சி (நீதிமன்ற அரங்கம்–7 மற்றும் குடியிருப்பு–3) | 7.54 | பணிகள் மார்ச் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |



| | | | |
|---|---|---|---|
| 11. | திருச்செந்தூர் (நீதிமன்ற அரங்கம்–2 மற்றும் குடியிருப்பு–1) | 2.61 | நீதிமன்றப் பணிகள் பணிகள் மார்ச் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. குடியிருப்புக்கான பணித்தளம் தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளது. |
| 12. | ஆம்பூர் (நீதிமன்ற அரங்கம்–2 மற்றும் குடியிருப்பு–1) | 2.31 | பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 13. | அரக்கோணம் (நீதிமன்ற அரங்கம்–2 மற்றும் குடியிருப்பு–1) | 2.83 | பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| 14. | வள்ளியூர் (நீதிமன்ற அரங்கம்–3 மற்றும் குடியிருப்பு–3) | 4.69 | குடியிருப்பு பணிகள் முடிக்கப்பட்டன. நீதிமன்ற அரங்கப் பணிகள் டிசம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 15. | பத்மநாபபுரம் (நீதிமன்ற அரங்கம்–4) | 4.47 | பணிகள் நவம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 16. | திருவையாறு (நீதிமன்ற அரங்கம்–2) | 1.92 | பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 17. | பரமக்குடி (நீதிமன்ற அரங்கம்–2 மற்றும் குடியிருப்பு–1) | 2.40 | குடியிருப்பு பணிகள் முடிக்கப்பட்டன. நீதிமன்ற அரங்கப் பணிகள் மார்ச் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |



| | | | |
|---|---|---|---|
| 18. | திருவண்ணாமலை (நீதிமன்ற அரங்கம்–12 மற்றும் குடியிருப்பு–2) | 14.51 | குடியிருப்பு பணிகள் முடிக்கப்பட்டன. பணிகள் மார்ச் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 19. | காங்கேயம் (நீதிமன்ற அரங்கம்–2) | 2.89 | பணிகள் நவம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 20. | பென்னாகரம் (நீதிமன்ற அரங்கம்–1 மற்றும் குடியிருப்பு–1) | 1.79 | குடியிருப்புப் பணிகள் முடிக்கப்பட்டன. நீதிமன்ற அரங்கப் பணிகள் பணிகள் மார்ச் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 21. | குளித்தலை (நீதிமன்ற அரங்கம்–4 மற்றும் குடியிருப்பு–1) | 4.10 | பணிகள் மார்ச் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| 22. | திருச்செங்கோடு (நீதிமன்ற அரங்கம்–4 மற்றும் குடியிருப்பு–2) | 5.29 | பணிகள் அக்டோபர் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 23. | இராசிபுரம் (நீதிமன்ற அரங்கம்–3 மற்றும் குடியிருப்பு–2) | 4.65 | பணிகள் ஜுன் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 24. | பழனி (நீதிமன்ற அரங்கம்–3 மற்றும் குடியிருப்பு–1) | 3.83 | பணிகள் மார்ச் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 25. | திருவாரூர் (நீதிமன்ற அரங்கம்–5 மற்றும் குடியிருப்பு–5) | 10.85 | நீதிமன்ற அரங்கப் பணிகள் செப்டம்பர் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. குடியிருப்பு பணிக்கான ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |



| | | | |
|---|---|---|---|
| 26. | காட்பாடி (நீதிமன்ற அரங்கம்–2 மற்றும் குடியிருப்பு–2) | 3.22 | பணிகள் ஜுன் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 27. | இராணிப்பேட்டை (நீதிமன்ற அரங்கம்–3) | 3.65 | பணிகள் பிப்ரவரி 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 28. | குழித்துறை (நீதிமன்ற அரங்கம்–6 மற்றும் குடியிருப்பு–1) | 5.64 | பணிகள் செப்டம்பர் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 29. | ஓமலூர் (நீதிமன்ற அரங்கம்–2) | 3.03 | பணிகள் செப்டம்பர் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |
| 30. | சங்கரன்கோயில் (நீதிமன்ற அரங்கம்–4 மற்றும் குடியிருப்பு–2) | 3.81 | பணிகள் ஜுன் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. |

**3.2.2. 2011–2012 மற்றும் 2012–2013ஆம் ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்படவுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புப் பணிகள்.**

| வ. எண் | பணி | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | திருமயம் (நீதிமன்ற அரங்கம்–1) | 1.73 |
| 2. | தென்காசி (நீதிமன்ற அரங்கம் – 5, குடியிருப்பு – 4) | 5.28 |
| 3. | மேட்டுப்பாளையம் (நீதிமன்ற அரங்கம்–1) | 1.79 |
| 4. | திருச்சிராப்பள்ளி (நீதிமன்ற அரங்கம்–18 மற்றும் குடியிருப்பு–3) | 21.82 |
| 5. | திருவள்ளூர் (நீதிமன்ற அரங்கம்–7 மற்றும் குடியிருப்பு–3) | 12.28 |
| 6. | வேதாரண்யம் (நீதிமன்ற அரங்கம்–1 மற்றும் குடியிருப்பு–1) | 2.02 |
| 7. | இரணியல் (நீதிமன்ற அரங்கம்–2 மற்றும் குடியிருப்பு–1) | 2.65 |
| 8. | பாலக்கோடு (நீதிமன்ற அரங்கம்–2) | 2.85 |
| 9. | வால்பாறை (நீதிமன்ற அரங்கம்–1 மற்றும் குடியிருப்பு–1) | 2.85 |

**3.2.3.** சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் சட்ட அலுவலர்களுக்கான அலுவலக கட்டடம் ரூ.5.70 கோடி செலவில் கட்டப்படவுள்ளது.

**3.2.4.** சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான 272 குடியிருப்புகள் ரூ.24.75 கோடி மதிப்பீட்டில் நவம்பர் 2011–ற்குள் கட்டிமுடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**3.2.5.** மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மாநில மண்டல நீதித்துறை கல்விச் சாலை மைய கட்டடங்கள், 13–வது நிதிக்குழு பங்களிப்பு ரூ.15 கோடி மற்றும் மாநில நிதி பங்களிப்பு ரூ.2 கோடி மொத்தம் ரூ.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன.



**3.2.6.** நீதிமன்றத்திற்கு செல்லும் முன்பாகவே நட்பிணக்கமான முறையில் வழக்குகளை விசாரித்து தீர்வு காண்பதற்காக மாற்று வழி பிணக்குகள் தீர்வு மையங்கள் தமிழகத்திலுள்ள 30 மாவட்டங்களில் 13வது நிதிக்குழுவின் பங்கேற்புடன் ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. முதற் கட்டமாக ரூ.4.20 கோடி செலவில் (13வது நிதிக்குழு ரூ.1.00 கோடி மாநில நிதி ரூ.3.20 கோடி) சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் கட்டப்படவுள்ளது.

## 3.3. தேசிய ஊரக நலவாழ்வு திட்டம் (மைய அரசு உதவி பெறும் திட்டம்)

### 3.3.1. 2011–2012 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படவுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் / துணை சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைக் கட்டடங்கள்

| வ. எண் | பணி | மொத்த தொகை (ரூ. கோடியில்) | 2011 – 2012ஆம் ஆண்டுக்கான பணிகள் |
|---|---|---|---|
| 1 | 75 இடங்களில், 30 படுக்கை வசதிகளை கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணி. (73 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன) | 45.01 | 2 |
| 2 | 50 இடங்களில், 30 படுக்கை வசதிகளை கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணி. (40 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன) | 31.00 | 10 |
| 3 | 110 இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் பணி. (84 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன) | 24.12 | 26 |
| 4 | 20 இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் பணி. (18 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன) | 4.62 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 2008–2009ஆம் ஆண்டில் கைவிடப் பட்ட பணிகளில் 26 பணிகளை மேற்கொள்ளுதல்.<br>(16 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன) | 16.81 | 10 |
| 6 | மருத்துவம் மற்றும் ஊரக சுகாதார பணிகள் இயக்குநரகம் மூலம் கண்டறியப்பட்ட 12 இடங்களுக்கான 19 பணிகள்.<br>(6 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன) | 19.10 | 13 |
| 7 | புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் 9 இடங்களில் கட்டும் பணி.<br>(4 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன) | 1.93 | 5 |



| | | | |
|---|---|---|---|
| 8 | 14 இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணி.<br>(9 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன.) | 5.66 | 5 |
| 9 | தேசிய ஊரக நலப் பணிகள் திட்டத்தின் கீழ் 2009–2010 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 26 இடங்களில் மேம்பாட்டுப் பணிகள்.<br>(16 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன.) | 2.86 | 10 |
| 10 | மருத்துவமனைகளில் கூடுதல் வசதிகளை அமைத்து தரும் 505 பணிகள்.<br>(437 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன) | 35.24 | 68 |

| | | | |
|---|---|---|---|
| 11 | 42 இடங்களில் மருத்துவ மைய கட்டடம் | 31.92 | 42 |
| 12 | அரசு மருத்துவமனைகளில் கூடுதல் வசதி அமைத்துத் தரும் 581 பணிகள் (இரண்டாம் கட்டம்)<br><br>(90 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன.) | 38.45 | 491 |
| 13 | 50 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துதல். | 11.00 | 50 |
| 14 | 26 அரசு மருத்துவமனைகளை தரம் உயர்த்தும் பணி. | 16.38 | 26 |



**3.3.2.** 15 இடங்களில் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் மகப்பேற்றுப் பிரிவுக்கான காத்திருப்போர் அறை கட்டும் பணிகளில் 13 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு, 2 இடங்களில் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

**3.3.3.** மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் ரூ.2.64 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு கட்டடத் தொகுதி கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## 3.4. பள்ளிக் கல்வித் துறை (நபார்டு நிதி உதவியுடன்)

**3.4.1.** நபார்டு நிதியுதவியுடன், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், பரிசோதனைக் கூடம், குடிநீர் மற்றும் கழிவறை கட்டுதல் போன்ற இன்றியமையாப் பணிகளை

மேற்கொள்ளும் திட்டப் பணிகளின் நிலைகள் பின்வருமாறு:–

| கட்டம் (Phase) | பள்ளிகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) | முடிக்கப்பட்ட பணிகள் எண்ணிக்கை | 2011–2012 மற்றும் 2012–2013ம் ஆண்டுக்கான பணிகள் | நிலை |
|---|---|---|---|---|---|
| VI | 234 | 161.32 | 230 | 2 | 2– பணிகள் கைவிடப்பட்டன |
| VII | 195 | 131.69 | 181 | 13 | 1– பணி கைவிடப்பட்டது |
| VIII | 59 | 63.36 | 46 | 13 | – |
| IX | 362 | 410.74 | 279 | 83 | – |
| X அ | 303 | 235.14 | 73 | 230 | – |
| X ஆ | 259 | 230.30 | – | 259 | – |



## 3.5. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

3.5.1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள புதிய கட்டடத்தின் தொகுதி–A பல துறை உயர் சிறப்பு மருத்துவமனை அதாவது Multi Super Speciality Hospital ஆக மாற்றப்படும். மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் தேவைக்கேற்ப தொகுதி–Aயினை ஒரு பல துறை உயர் சிறப்பு மருத்துவமனையாக மாற்றுவதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப் படும். மேலும் முடிவடையாத நிலையிலுள்ள தொகுதி–B ஒரு மருத்துவக் கல்லூரியாக மாற்றப்படும். இக்கட்டடத்தை மாற்றுவதற்கு தேவையான பணிகள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையின் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

**3.5.2. மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை**

**2011–2012 மற்றும் 2012–2013ஆம் ஆண்டுகளில் முடிக்கப்படும் மருத்துவமனைக் கட்டட பணிகள்.**

| வ எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | சிவகங்கையில் புதிய மருத்துவக் கல்லூரி (கட்டம் I, II, III) | 97.00 |
| 2. | சென்னை மருத்துவ கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டுதல் | 56.63 |
| 3. | திருவாரூரில் புதிய மருத்துவக் கல்லூரி | 92.87 |
| 4. | தர்மபுரியில் புதிய மருத்துவக் கல்லூரி (கட்டம் – II) | 91.26 |
| 5. | சென்னை எழும்பூரில் உள்ள மகளிர் மருத்துவயியல் மருத்துவமனை சிறப்பு மைய கட்டடம் கட்டுதல் | 56.32 |
| 6. | சென்னை திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் சிறப்பு மைய கட்டடம் கட்டுதல் | 16.65 |
| 7. | சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரியில் கூடுதல் கட்டடம் | 13.66 |
| 8. | சென்னை குழந்தைகள் நல மருத்துவ நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் | 13.83 |

| | | |
|---|---|---|
| 9. | சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அடுக்குமாடி கட்டடம் (கட்டம் – 2) | 41.20 |
| 10. | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சைக்கான கட்டட தொகுதி கட்டுதல் | 14.50 |
| 11. | சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 140 முதுகலை மாணவியர்களுக்கான விடுதி மற்றும் இதர கட்டடங்கள் | 3.70 |



| | | |
|---|---|---|
| 12. | கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரியில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்கான கட்டடம் கட்டுதல் | 2.35 |
| 13. | இராமநாதபுரத்தில் அரசு செவிலியர் கல்லூரி கட்டடம் கட்டுதல் | 1.00 |
| 14. | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியை தரம் உயர்த்துவதற்காக கட்டடங்கள் கட்டுதல் | 50.00 |
| 15. | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் புதிய செவிலியர் கல்லூரி கட்டடம் கட்டுதல் | 4.97 |

## 3.5.3. தமிழ்நாடு மாநில சுகாதார அமைப்புத் திட்டம்

தமிழ்நாடு மாநில சுகாதாரத் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, தஞ்சாவூர், தேனி, வேலூர், கோயமுத்தூர் மற்றும் செங்கல்பட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ரூ.48.00 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.

## 3.6. சிறைத்துறை

### 3.6.1. சிறைச்சாலைகளை நவீனப்படுத்துதல்

சிவகங்கை மாவட்டம், புரசடையுடைப்பு கிராமத்தில் ரூ 2.41 கோடி மதிப்பீட்டில் புதிய திறந்தவெளிச் சிறைச்சாலை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.



இப்பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை மத்திய சிறைச்சாலையின் சிறை கண்காணிப்பாளர் அலுவலக கட்டடம் ரூ 1.18 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.7. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

3.7.1. சங்கராபுரம், குடவாசல், உளுந்தூர்பேட்டை மற்றும் திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் ரூ.196.63 இலட்சம் செலவில் கட்டும் பணிகள் முடிவுற்றன. கூத்தாநல்லூரில் தீயணைப்பு நிலையங்கள் கட்டும் பணி செப்டம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**3.7.2. 2011–2012 ஆம் ஆண்டில் முடிக்கப்படும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலைய கட்டடங்கள்.**

| வ. எண் | இடம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பேரம்பாக்கம் | 38.33 |
| 2. | கீழ்பெண்ணாத்தூர் | 36.72 |
| 3. | உத்திரமேரூர் | 38.91 |
| 4. | சீர்காழி | 35.73 |
| 5. | ஆண்டிப்பட்டி | 35.66 |
| 6. | வத்தலகுண்டு | 29.54 |
| 7. | சோளிங்கர் | 32.85 |
| 8. | திருப்பூர் | 29.71 |
| 9. | பள்ளிப்பட்டு | 38.84 |
| 10. | போடிநாயக்கனூர் | 29.08 |



## 3.8. போக்குவரத்துத் துறை

**3.8.1. 2010–2011ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 2011–2012ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள போக்குவரத்து துணை ஆணையர் அலுவலகக் கட்டடங்கள்.**

| வ. எண் | இடம் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | விழுப்புரம் | 0.73 |
| 2. | சேலம் | 0.68 |
| 3. | தஞ்சாவூர் | 0.57 |
| 4. | ஈரோடு | 0.62 |

**3.8.2.** உளுந்தூர்பேட்டை மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களில் முறையே **ரூ.0.75** கோடி மற்றும் **ரூ.0.61** கோடி மதிப்பீட்டில் அலுவலக கட்டடங்கள் கட்டும் பணிகள் டிசம்பர் **2011–**ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**3.8.3.** உளுந்தூர்பேட்டை, அரக்கோணம் மற்றும் வள்ளியூர் ஆகிய இடங்களில் ரூ.117.24 இலட்சம் மதிப்பீட்டில் சோதனைத்தடம் அமைக்கும் பணி டிசம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.9. வருவாய்த் துறை

**3.9.1.** நீலகிரி மாவட்டம், குந்தாவில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும் சேலம் மாவட்டம் வாழப்பாடியில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டிலும் வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**3.9.2.** சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்டும் பணி ரூ.37.62 கோடி மதிப்பீட்டில் செப்டம்பர் 2011–ற்குள் முடிக்கப்படும்.

**3.9.3.** உதகமண்டலத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் குடியிருப்பு செப்டம்பர் 2011–ற்குள் கட்டி முடிக்கப்படும்.



**3.9.4. நடைபெற்றுவரும் வருவாய்த்துறை அலுவலக கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள்**

| வ எண் | பணி | மொத்த தொகை (ரூபாய் கோடியில்) | 2011–2012 ஆம் ஆண்டுக் கான பணிகள் |
|---|---|---|---|
| 1 | திருத்தணி, தண்டராம்பட்டு, வேலூர், கடலூர், திட்டக்குடி, திருச்சி, தரங்கம்பாடி, சிவகங்கை, திருப்பத்தூர், ஆத்தூர், உசிலம்பட்டி மற்றும் சங்கரன்கோவில் ஆகிய 12 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல். (9 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன) | 19.21 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 29 வட்டாட்சியர் குடியிருப்புகள் (25 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன) | 4.51 | 4 |
| 3 | 16 வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள் (13 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன) | 1.31 | 3 |
| 4 | கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரத்தில் வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டுதல். | 2.03 | 1 |
| 5 | கோவில்பட்டி, அம்பாசமுத்திரம், தென்காசி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டும் பணி. | 7.51 | 4 |



## 3.10. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

### 3.10.1 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவ / மாணவியர் விடுதிகள் கட்டும் பணிகள்:

| ஆண்டு | பணி | மொத்த தொகை (ரூ. கோடியில்) | 2011–12ம் ஆண்டுக் கான பணிகள் |
|---|---|---|---|
| 2005–2006 | பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவருக்கான 416 விடுதிகள் கட்டுதல் (50 மாணவர்கள் தங்கும் வகையில் தரைதளம் மற்றும் முதல்தளம் கட்டுதல்) (348 பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டன) | 131.04 | 68 |

| | | | |
|---|---|---|---|
| 2007–2008 | பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான 50 விடுதிகள் கட்டுதல். (50 மாணவர்களுக்கான தரைதளம் மற்றும் முதல்தளம் கொண்ட 25 விடுதிகள் மற்றும் 100 மாணவர்களுக்கான தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளம் கொண்ட 25 விடுதிகள்) (35 பணிகள் ஏற்கெனவே முடிக்கப் பட்டன) | 32.15 | 15 |
| 2008–2009 | பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கான 25 விடுதிகள் கட்டுதல் (50 மாணவர்களுக்கான தரைதளம் மற்றும் முதல்தளம் ) (16 பணிகள் ஏற்கெனவே முடிக்கப் பட்டன) | 13.68 | 9 |



| | | | |
|---|---|---|---|
| 2009–2010 | பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப் பட்ட / சீர்மரபினரைச் சார்ந்த மாணவருக்கான 25 விடுதிகள் கட்டுதல் (50 மாணவர்களுக்கான தரைதளம் மற்றும் முதல்தளம் ) | 12.50 | 25 |
| 2010–2011 | பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினரைச் சார்ந்த மாணவருக்கான 25 விடுதிகள் (50 மாணவர் களுக்கான தரைதளம் மற்றும் முதல்தளம் ) | 13.50 | 25 |

## 3.11. சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

மாமல்லபுரத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் பணி ரூ.3.66 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ளது.

### 3.11.1. நினைவகங்கள்

#### 3.11.1.1. பேரறிஞர் அண்ணா நினைவிடம்

தமிழ்நாட்டில் ‘‘பேரறிஞர் அண்ணா’’என மக்களால் போற்றப்படும் திராவிட இயக்கத்தின் ஒப்பற்ற தலைவர் டாக்டர். சி.என்.அண்ணாதுரை அவர்களின் நினைவிடம் சென்னை மெரினா கடற்கரையில் 1973–ஆம் ஆண்டு 11.20 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டது. தற்போது, இந்நினைவிடத்திற்கான சுற்றுச் சுவரை உயர்த்தி கட்டுதல், துருப்பிடிக்காத இரும்பு கைப்பிடிகள் அமைத்தல், நினைவிடத்தின் முன்பகுதியில் உள்ள தரையினை புனரமைத்தல், புல்வெளி மற்றும் நீரூற்றுகளை புனரமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



#### 3.11.1.2. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவிடம்

பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ‘‘புரட்சித் தலைவர்’’ என்றும் ‘‘மக்கள் திலகம்’’ என்றும் மக்களால் போற்றப்படும் மாபெரும் திராவிட இயக்க தலைவர்களில் ஒருவராவார். தமிழ்நாட்டின் தன்னிகரில்லாத் தலைவராகவும் தொடர்ந்து மூன்று முறை முதலமைச்சராகவும் இருந்தவர். சென்னை மெரினா கடற்கரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்திற்கு அருகில் டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்களுக்கு 1988ல் நினைவிடம் கட்டப்பட்டது. பின்னர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 1992–ஆம் ஆண்டில் இத்தலைவரின் நினைவிடம் 8.25 ஏக்கர் பரப்பளவில் விரிவுபடுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. தற்போது இந்நினைவிடத்தினை

அழகுற மேம்படுத்திட புல்தரைகள் மற்றும் நீரூற்றுக்கள் உள்ளிட்ட புதிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**3.11.1.3. சென்னை கிண்டி காந்தி மண்டப நினைவக வளாகம்**

சென்னை கிண்டியில் சுமார் 18.42 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள காந்தி மண்டப நினைவக வளாகத்தினை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## 3.12. கலை மற்றும் பண்பாட்டுத் துறை கட்டடப்பணிகள்

**3.12.1.** 2011–2012–ஆம் ஆண்டில் முடிக்கப்படும் கலை மற்றும் பண்பாட்டு மைய கட்டடங்கள்.



| வ. எண் | இடம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 92.92 | பணிகள் நடைபெற்று வருகிறது. செப்டம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது. |
| 2. | மதுரை | 87.10 | பணிகள் நடைபெற்று வருகிறது. டிசம்பர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது. |
| 3 | திருச்சி | 96.00 | பணிகள் நடைபெற்று வருகிறது. அக்டோபர் 2011–ற்குள் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது. |

**3.12.2.** ரூ.3.68 கோடி செலவில், சென்னை இசைக்கல்லூரியில் திறந்தவெளி அரங்கம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை செப்டம்பர் **2011**–ற்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**3.12.3.** ரூ.2.30 கோடி செலவில், சென்னை அருங்காட்சியக புனரமைப்புப் பணிகள் (மொத்தம்–9 பணிகள்) மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவற்றில் இரண்டு பணிகள் முடிவுற்றன. இரண்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்ற பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

**3.12.4.** ரூ.50.00 இலட்சம் செலவில், திருவையாறு இசைக் கல்லூரியில் சுற்றுச்சுவர் மற்றும் கழிவறைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



### 3.13. புராதனக் கட்டடங்களை சீரமைத்து பாதுகாத்தல்.

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள புராதானக் கட்டிடங்களை (Heritage Buildings) அதன் தொன்மையான கட்டடக்கலை, கலைநயம், வரலாற்று சிறப்புகள், தனித்துவமான அடையாளங்கள் மற்றும் தொல்லியல் மரபுகள் மாறாவண்ணம் சீரமைத்து பாதுகாத்து பராமரிக்க பொதுப்பணித் துறை கட்டடக் கலைஞர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு உரிய சிறப்புப் பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 3.14. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை (மைய அரசு உதவியுடன்)

**3.14.1.** ரூ.13.68 இலட்சம் செலவில், திருநெல்வேலி மாவட்டத்தில் திருவேம்பலாபுரத்தில் புதிய கால்நடை மருந்தகம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை செப்டம்பர் 2011–ல் முடித்திட திட்டமிடப் பட்டுள்ளது.

**3.14.2.** ரூ.20.50 இலட்சம் செலவில், திருநெல்வேலி மாவட்டம், அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்ட கால்நடை பண்ணையிலுள்ள பன்றி தொழுவப் பிரிவினை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணியினை செப்டம்பர் 2011–ல் முடித்திட திட்டமிடப் பட்டுள்ளது.



## 3.15. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துக்கான கிடங்கு மற்றும் அலுவலகம் கட்டும் பணி ரூ.1.43 கோடி மதிப்பீட்டில், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் எ.செங்கம்பாளையத்தில் நடைபெற்று வருகிறது. இப்பணியினை செப்டம்பர் 2011–ற்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.16. பதிவுத் துறை

**3.16.1.** ஒருங்கிணைந்த பதிவுத் துறை கட்டடங்கள் கட்டும் பணிகள், திருநெல்வேலி, நாகர்கோவில், தூத்துக்குடி ஆகிய இடங்களில் முடிவுற்றன, மதுரை, கடலூர் ஆகிய இடங்களில் பணிகளை செப்டம்பர் 2011–ற்குள் முடித்திட திட்டமிடப் பட்டுள்ளது.

**3.16.2.** வேலூரில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை கட்டடங்கள் கட்டும் பணி ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணி செப்டம்பர் 2011–ற்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**3.16.3.** வெள்ளக்கோயில் (ஈரோடு), அவல்பூந்துறை (ஈரோடு), குன்றத்தூர்(காஞ்சிபுரம்), ஆத்தூர் (திண்டுக்கல்), இராஜாக்கமங்கலம் (கன்னியாகுமரி) ஆகிய 5 இடங்களில் ஒவ்வொன்றும் ரூ.28.08 இலட்சம் செலவில் சார்பதிவாளர் அலுவலகம் கட்டும் பணிகள் பல்வேறு கட்டட கட்டுமான நிலைகளில் உள்ளன. இப்பணிகளை செப்டம்பர் 2011–ற்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.



## 3.17. அண்ணா மேலாண்மை நிலையம்

சென்னை, அண்ணா மேலாண்மை நிலைய வளாகத்தில் ரூ.6.62 கோடி மதிப்பீட்டில் அனைத்து இந்திய குடிமைப்பணிகள் பயிற்சி மையக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## 3.18. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

சென்னை அம்பத்தூரில், ரூ.80.00 இலட்சம் மதிப்பீட்டில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலகம் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. நவம்பர் 2011–ற்குள் பணி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோடம்பாக்கத்தில் ரூ.88.77 இலட்சம் மதிப்பீட்டில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும்

நுகர்வோர் பாதுகாப்புத்துறைக்கு அலுவலகம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

## 3.19. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை

சென்னை, பூங்கா நகரில் ரூ.18.27 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்காக புதிய கட்டட கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை செப்டம்பர் 2012–ற்குள் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

## 3.20. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பின்வரும் இடங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலைய கட்டடங்களை புதுப்பித்தல் மற்றும் தரம் உயர்த்துதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.



| வ. எண் | இடம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் (மகளிர்) | 100.00 | பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. செப்டம்பர் 2011–ற்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளன |
| 2. | தருமபுரி | 87.50 | பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளன |
| 3. | தாராபுரம் (திருப்பூர்) | 87.50 | பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளன |
| 4. | சென்னை (வடக்கு) | 100.00 | பணிகள் டிசம்பர் 2011–ற்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளன |
| 5. | தஞ்சாவூர் | 100.00 | பணிகள் செப்டம்பர் 2011–ற்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளன |

| | | | |
|---|---|---|---|
| 6. | காரைக்குடி | 87.50 | பணிகள் தொடங்கப்பட்டு பிப்ரவரி 2012–ற்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளன |
| 7. | நாகப்பட்டினம் | 60.00 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 8. | அரியலூர் | 60.00 | மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது. |
| 9. | திண்டுக்கல் | 60.00 | பணிகள் தொடங்கப்படவுள்ளன |

**கே.வி.இராமலிங்கம்**
**பொதுப்பணித் துறை அமைச்சர்**